# ADM COURT, SANKARANKOVIL

தேதி 24.06.2025

அசல் வழக்கு எண். 224/2017

**வா.சா.2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை. சுடலைமணி என்பவர் என்னை அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கு யாரால் யார் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கானது எவ்வளவு விஸ்தீரணம் உடைய சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 10 சென்ட் இடத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு தரப்பினர்கள் தபசில் சொத்து குறித்து காவல்நிலையத்தில் பேசி முடிப்பதற்காக சென்றபோது நானும் உடன் சென்றிருந்தேன். எப்போது அவ்வாறு பேசி முடிப்பதற்காக காவல்நிலையம் சென்றார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. காவல்நிலையத்தில் வழக்கு தரப்பினர்கள் பேசி முடிப்பதற்காக சென்றபோது நான் எதுவும் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் மன்மதராஜுக்கும் அவரது பங்காளிக்கும் இடையே சமாதானம் பேசப்பட்டது. சுடலைமணிக்கும் எனக்கு என்ன சம்பந்தம் என்றால் அவர் எனது ஊர்க்காரர். காவல்நிலையத்தில் சுடலைமணிக்கு 7-/12 சென்ட் இடம் பாத்தியம் என்றும், அவரது பங்காளிக்கு 2-1/2 சென்ட் இடம் பாத்தியம் என்றும் பாகம் பிரித்து எழுதிக்கொண்டார்கள். எனக்கு எழுதப்படிக்கத்தெரியாது. காவல்நிலையத்தில் பாகம் பிரித்து எழுதிக்கொண்ட ஆவணத்தை நான் பார்க்கவில்லை. காவல்நிலையத்தில் எழுதப்பட்ட மேற்படி ஆவணத்தில் நான் சாட்சிக் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. நான் கூறுவதுபோல் காவல்நிலையத்தில் சமாதானம் ஏதும் பேசப்படவில்லை என்றால் சரியல்ல. சுடலைமணியுடன் கூட்டு சேர்ந்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும்

என்ற நோக்கத்தில் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல,. மேற்சொன்ன 10 சென்ட் வழக்கு சொத்தின் மால்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேன். எனக்கு வழக்கு சொத்தை பற்றி எதுவும் தெரியாமல் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**